REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.
மலர் 4] சென்னை: மார்கழி 18௨ செவ்வாய் (1—1—57) ★ ★ வெளியூர்: மார்கழி 19௨ புதன் (2—1—57) [இதழ் 17

'கடை நிலை ஊழியர்' என்ற பெயரை மாற்றுக!

ஹவில்தார்கள், காவலாளிகள், லஸ்கர்கள், வேலையாட்கள் ஆகிய சர்க்கார் ஊழியர்கள் எல்லாம், இனி தங்களை 'முதல் கிரேடு' ஊழியர்கள் என்று அழைக்கவேண்டும் என்று கோரியிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

மந்திரிகள் பெரிய அதிகாரிகள் ஆகியோரைச் சந்திக்க வருபவர்கள் தங்களையே முதன்முதலாகச் சந்திப்பதால், தாங்கள்தான் மக்களிடம் முதலில் நேரடித் தொடர்புகொள்பவர்கள் என்றும்,

(4-ம் பக்கம் பார்க்க)

'காமராசர்களின் அபத்த வாதங்கள் இனி தமிழ் நாட்டில் எடுபடாது'

'தமிழ் மக்கள் நலனுக்குப் பாடுபட கழகம் தவிர வேறு கட்சி இல்லை'

வாக்காளருக்கு அண்ணா அறைகூவல்

கடந்த 26-12-56 அன்று மாலை சென்னை 37-வதுவட்டம் இராயப்பேட்டை தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய கருத்துரையின் முற்பகுதி முன்பே இங்கு தரப்பட்டுள்ளது; எஞ்சிய பிற்பகுதி கீழே தரப்படுகிறது:—

"சர்க்கஸ்காரனுக்கு, அவன் பழக்கும் சிங்கத்தாலேயே சாவு என்பதைப்போல, காங்கிரசுக்கும் அதனிடமுள்ள பணக்காரர்களாலேயே சாவு என்று கூறவிரும்புகிறேன்.

சாசுவதமா என்ன?

"மேலும், காங்கிரசார் இந்த பணபலம் தங்களுக்குச் சாசுவதமானது என்று கருதவேண்டாம் என்றும் எச்சரிக்க விரும்புகிறேன்.

"எப்படியாவது ஊரானவேண்டும் என்பதற்காகக் காங்கிரசார் பணபலத்தை நம்பியிருப்பது ஆபத்தானதாகும்!

வாழ்வுதர இயலாதே!

"பெரிய மிட்டாக்களையும் மிராசுகளையும் முதலாளிகளையும் நம்பியிருக்கும் காங்கிரஸ், நாட்டு மக்களுக்கு—ஏழை எளியோருக்கு ஏதும் வாழ்வுதர முடியாது என்பதையும் வாக்காளராயுள்ள மக்கள் எண்ணிப்பார்த்தாகவேண்டும்.

தோள் வீரமும், இதயத் துடிப்புமே நம்பிக்கை

"நாங்கள் தேர்தலில் நம்பியிருப்பதெல்லாம் உங்களைத்தான்—மக்களைத்தான்! உங்கள் கண் ஒளியும் தோள் வீரமும் இதயத் துடிப்பும்தான் எங்களுக்கு நம்பிக்கையூட்டுகின்றன.

சட்ட மன்றத்திலும் சென்று வாதாட........!

"இத்தனை கடுமையான மழை பெய்தும், மழையில் நனைந்துகொண்டே நின்றுகொண்டு கருத்துக்களைக் கேட்கும் உங்களை நாங்கள் நம்புவது, எங்களுக்குப் பெருமை தருவதாகும். இவ்வளவு நல்லவர்கள், எத்தனை இன்னல்களுக்கு இரையாகிறார்கள் என்று எண்ணும்போது, எங்களுக்கு உணர்ச்சி மேலிடுகிறது—கொப்பளிக்கிறது. அதன் விளைவுதான்—ஏழை எளியவர்களான நல்லவர்கள் படும் துயர் துடைக்க நம்மால் ஏதாவது செய்ய முடியுமா என்ற விழைவுதான் கழகம்; அது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளில், இந்த நல்லவர்களுக்காக சட்ட மன்றத்திலும் சென்று வாதாடுவது—போராடுவது என்பதும் ஒன்று.

[illegible] நாங்கள் சட்டமன்றத்திற்குச் செல்லவேண்டும் என் [illegible] அது [illegible] தேர்தலிலசையால் அல்ல [illegible] [illegible]டுவது! மா[illegible] வேண் [illegible] வேண்டும்

என்பது மட்டுமே எங்கள் நோக்கமானால், நாங்கள் இங்கே வந்து உங்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கத் தேவை இல்லை.

அவர்கள் சென்ற வழி எங்களுக்குத் தெரியாதா?

"மாணிக்கவேலரையும், இராமசாமிப் படையாச்சியையும் பாருங்கள்; அவர்கள் பதவி பெற்ற வழி உங்களுக்குத் தெரியாதா?

"அந்த வழி நல்லவழி அல்ல; நாட்டுக்கு [illegible] வழி அல்ல; தமிழ் மரபுக்கு [illegible] அல்ல என்பதை நாங்கள் எடுத்துச் சொல்கிறோம்.

அந்த நிலை ஏற்படாது

"உங்களுக்கும் கழகத்திற்கும் உள்ள சிந்தனைப் பொருத்தம்—இதய உறவு, உங்களைவிட்டு எங்களை எவராலும் பிரிக்க முடியாதபடி பிணைத்திருக்கின்றன. உங்களுக்கு நாங்கள் துரோகம் இழைக்க வேண்டுமென எவரேனும் எதிர்பார்த்தால் ஏமாறுவர் என்று நான் கூறவிரும்புகிறேன்.

"கழகம் இத்தனை ஆண்டுகளாய் படாதபாடுபட்டு சேகரித்துள்ள உங்களது ஆதரவு — உணர்ச்சி இவற்றையும் தனது தன்மானத்தையும் எந்தக் காரணத்திற்காகவும் இழக்க நாங்கள் சம்மதிக்கமாட்டோம்.

வெற்றி பெற வாய்ப்பு

"மக்கள் இப்போது காட்டிவருகிற எழுச்சியையும், உற்சாகத்தையும் தேர்தல்வரை தொடர்ந்து

(4-ம் பக்கம் பார்க்க)

'தேர்தல் இணைப்போ கூட்டு முன்னணி ஏற்பாடோ கூடாது'

மற்ற அரசியல் கட்சிகளுக்கு விட்டுக்கொடுத்தலும் கூடாதாம்!

அரசியல் கட்சிகளில் சேராத சுயேச்சைகளை லோகியா கட்சி ஆதரிக்குமாம்!

பிரகலாதநகர், டிச. 30—

அனைத்திந்திய சோஷலிஸ்டு (லோகியா) கட்சியின் தேசிய மாநாடு இங்கு நடைபெற்றது. அதில், மற்ற அரசியல் கட்சிகளுடன் தேர்தல் இணைப்போ கூட்டு முன்னணி ஏற்பாடோ கூடாது என்றும், குறிப்பிட்ட தொகுதிகளில் மற்ற அரசியல் கட்சி அபேட்சகர்களுக்கு விட்டுக்கொடுத்தல் போமும் வேண்டவே வேண்டாம் என்றும் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

குறிப்பிட்ட தொகுதிகளில் இருக்கும் வாக்காளர் மொத்தத் தொகையில் ஒரு சதவிகித வாக்காளர்களைக் கட்சி உறுப்பினர்களாக, அத்தொகுதியில் உள்ள மொத்த வாக்குப் பதிவுச் சாவடிப் பகுதிகளில் மூன்றுக்கு ஒன்று வீதம் பரவலாகச் சேர்க்கப்பட்டிருக்கும் தொகுதிகளில் மட்டுமே கட்சியின் பேரால் அபேட்சகர்களை நிறுத்துவது என்று ஏற்கனவே செய்திருந்த முடிவு மீண்டும் உறுதி செய்யப்பட்டது.

மேற்படி முடிவுப்படி கட்சி உறுப்பினர்களைச் சேர்த்திருக்கும் தொகுதியிலும்கூட, கட்சியின் சார்பில் தேர்தலுக்கு [illegible] அபேட்சகர்கள் கிடை[illegible]யானால், அத்தகு தொ[illegible] கட்சியின் சார்பில் [illegible] இல்லை என[illegible] கூடி தீர்மா[illegible] வேற்றப்பட்டாம் ஒன்றும் [illegible] லோகியா-குக்கிறது.

குறிக்கோள் கட்சியின் தேர்தல் கொள்கை அப்படியே ஒப்புக்கொள்கிற—அல்லது அதற்கு நோக்கையில் குறைந்த பட்சக் கோரிக்கைகளைக் கொண்டு பணியாற்ற விரும்புகிற அபேட்சகர்களை ஆதரிப்பது என்றும் லோகியா கட்சி முடிவு கட்டி இருக்கிறது.

எந்த அரசியல் கட்சியிலும் கலந்திராத தகுதிவாய்ந்த சுயேச்சைகளை தேர்தலில் ஆதரிப்பது என்றும் மேற்படி கட்சி, தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருக்கிறது.

மத்திய மந்திரிக்குக் கருப்புக் கொடி

மகாகுசராத் ஆர்ப்பாட்டம் நீடிக்கிறது

ஆனந்த், டிச. 31—

குசராத் இ[illegible]ஞர் காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொள்ள வந்த மத்திய மந்திரி [illegible] கேஸ்கர், மகா குசராத் (மொழிவழி) மாநிலம் கோரும் ஆர்ப்பாட்[illegible]க்காரர்களிடம் சிக்கிக்கொண்டு படாதபாடுபட்டிருக்கிறார் எனத் தெ[illegible]ரியவருகிறது.

அவர் மாநாட்டில் பேசிக்கொண்[illegible]டிருக்கும்போது, பந்தலுக்கு வெளியே நின்றுகொண்டு கோஷ[illegible]ங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர், குசராத்தி இளை[illegible]ர்கள்!

காரை வளைத்தனர்

அவர் பேசி முடித்துவிட்டு வெளியே வந்தபோது, காரைச் சுற்றி வளைத்துக்கொண்டு கோஷங்கள் எழுப்பியிருக்கின்றனர்.

கல்லெறிந்தனர்

அவர் கார் புறப்பட்டதும், கார் மீது கல்லெறிந்து கலாட்டா செய்தனர் என்றும் கூறப்படுகிறது.

பிரதிநிதிகளையும்...

மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் விடவில்லையாம்! அவர்கள் உணவருந்திக்கொண்டிருந்தபோது கல்லெறிந்து கலாட்டா செய்திருக்கின்றனர்.

கருப்புக் கொடி

மாநாட்டில் கலந்துகொள்ள டாக்டர் கேஸ்கரும் இதர பிரதேசத் தலைவர்களும் வந்தபோது கருப்புக் கொடி காட்டி, 'மகாகுசராத் வேண்டும்,' என்பன போன்ற கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

சுகர்ணோ சர்க்காருக்கு 'புரட்சித் தலைவர்' எச்சரிக்கை

மத்திய சர்க்கார் யுத்தப் பிரகடனம் வெளியிடுகிறது

ஜகார்தா, டிச. 31—

சுமத்திராவில் எழுந்துள்ள மத்திய சர்க்காருக்கு எதிரான 'புரட்சி', இன்று 12-ம் நாளன்று வெகு கடுமையானதோர் கட்டத்தை அடைந்திருக்கிறது என்று தெரியவருகிறது.

உணவுப் பொருள்கள், 'புரட்சி'யில் ஈடுபட்டுள்ள மத்திய சுமத்திரா மாநிலத்திற்குச் செல்லாமல் தடுக்கப்பட்டிருப்பதை ஒட்டி புரட்சித் தலைவர் லெப்டினெனட் கர்னல் அகமது உசேன், மத்திய சர்க்காருக்குக் கடுமையானதோர் எச்சரிக்கை தந்திருக்கிறார்.

மத்திய சுமத்திரா மாநில மக்களின் விருப்பங்களையும் ஆசைகளையும் பற்றிக் கிஞ்சிற்றும் மத்திய சர்க்கார் கவலைப்படாமலிருக்கும் போது மாநில சர்க்கார், ஆட்சிப் பொறுப்பைத் தாங்களே ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்கள் என்று அந்த 'புரட்சி'த் தலைவர் விளக்கம் தந்திருக்கிறார்.

தென் சுமத்திரா மாநிலத்தின் மீது யுத்தப் பிரகடனம் வெளியிட்டிருக்கிறாராம், குடியரசுத் தலைவரான டாக்டர் சுகர்ணோ. எப்படியேனும் அந்த மாநிலத்தை, மத்திய சர்க்கார் வசத்தின் கீழ் கொண்டுவந்து விடவேண்டும் என்று அவர் விரும்புகிறாராம்,

மரக்கட்டைகள் பதனிடும் இரு தொழிற்சாலைகள்

சென்னை, ஜன. 1—

மதுரையிலும், பொள்ளாச்சியிலும் மரக்கட்டைகள் பதனிடும் இரு இயந்திரசாலைகளை நிறுவுவதற்கு சென்னை அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது.

துவக்கச் செலவு ரூ. 1,30,000; ஆண்டுதோறும் ஏற்படும் செலவு ரூ. 17,000. துவக்கச் செலவில் முக்கால் பாகத்தைக் கடனாகத் தந்துதவ இந்தியப் பேரரசு முன்வந்துள்ளதாகத் தெரிகிறது.

கோவையில் ஒரு மருத்துவக் கல்லூரி

1957 ஜூலைத் திங்களில் துவங்குமாம்

கோவை, டிச. 31—

கோவையில் ஒரு மருத்துவக் கல்லூரி வரும் ஜூலைத் திங்களில் திறக்கப்படும் என்றும், சர்க்கார் சீக்கிரமே இது குறித்த முடிவை மேற்கொள்ளுவர் என்றும் மந்திரி சி. சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

[illegible]ட்சுமணசாமி விசாரணைக் [illegible] ஒரு மருத்துவக் கல்லூரி திறப்பதற்கு கோவையே சிறந்த இடம் என்று சிபாரிசு செய்திருக்கின்றனர்; காரணம் அங்கு கல்லூரிக்கான சில வசதிகள் கிடைப்பதால் சிக்கனமாக நடத்த முடியும் என்பதே என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

மத்தியக் கிழக்கு நிலை பற்றிய அமெரிக்கக் கொள்கையை டல்லஸ், இன்று ஐ. நா. செயலாளரிடம் விவாதித்தார் எனத் தெரிகிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 1—1—'57 செவ்வாய்

தாங்கிக் கொள்ள வேண்டும்'

பொதுத் தேர்தலுக்கு நாள் குறிப்பிடப்பட்டுவிட்டது.

ஆட்சிப் பொறுப்பில் உள்ள காங்கிரசுக் கட்சியும், தேர்தல் பிரச்சாரத்தைத் தீவிரமாகத் தொடங்கிவிட்டது.

ஐந்தாண்டுத் திட்டங்களை ஆடிக்காட்டவும் பாடிக் காட்டவும் காலட்சேபம் செய்து காட்டவுமான பணி துவங்கப்பட்டுவிட்டது.

தங்கள் ஆட்சிக் காலத்தில் தங்களால் சாதிக்கப்பட்டவைகள் எனப் பீத்திக்கொள்ளக் கூடியனவற்றை மட்டும் எடுத்துக்கூறி, பொதுமக்களின் ஆதரவை எதிர்நோக்கும் அளவுடன், காங்கிரசுத் தலைவர்கள் இருந்துவிடப்போவதில்லை.

இதுவரை இயற்றப்பட்டுள்ள புராண இதிகாசங்களில் இடம்பெற்றில்லாத பொய்களை எல்லாம் அடுக்கிக்காட்டி, தேர்தல் பிரச்சாரம் செய்யத்தான் போகிறார்கள் ஆளும் கட்சித் தலைவர்கள்.

அப்படி பலப்பல விதமான பொய்களைக்கூறி, மக்கள் வாக்குகளைப் பெறப் பார்க்கும் அளவுடன் காங்கிரசுக் கட்சியினர் இருந்துவிடமாட்டார்கள் என் ... திண்ணம்.

... துவாக மாற்றுக் கட்சி ... ன்மீதும், அவர்கள் ... பழிகளை எல்லாம் ... ப் பேசத்தான் போகின்றனர்.

அதிலும் குறிப்பாக நமது திராவிட முன்னேற்றக் கழகத்தை, ஆளும் கட்சித் தலைவர்கள், அளவுகடந்தும் முறை தவறியும் வாயில் வந்தபடியெல்லாம் தூற்றத்தான் போகின்றனர்.

நமது கழக உறுப்பினர்களும் தீவிரப்பற்றுடையோரும், நம்பால் மட்டற்ற அன்பு கொண்டுள்ள வாக்காளர்பெருமக்களும் எரிச்சல் கொள்ளக் கூடிய வகையில், நமது கழகக் கோட்பாடுகள் குறித்தும் நமது ...கக் காவலர்கள் பற்றியும் ...சலிக்க வசை பாடுவர் ... ஆளும் கட்சித் தலைவர்கள்.

அதுவுமன்றி, நமது கழகத் தோழர்கள் செய்யத்தகாத தீவினை செய்ததாகப் பழி சுமத்தி, நமது கழகத்தவர்மீது உண்மையான காங்கிரசு ஊழியர்களுக்கு ஆத்திரம் ஏற்படுமாறும் அவர்கள் தூண்டிவிடுவர்.

நமது கழகத்தவர்களின் தேர்தல் பணியினைப் பாழ்படுத்தவும் நமது கழக ஊழியர்களின் கருத்தை வேறு பக்கம் திருப்பிவிடவும், அக்கட்சியினர் பெருமுயற்சியில் ஈடுபடத்தான் போகின்றனர்.

காங்கிரசு ஆளவந்தார்களின் தேர்தல் போர் தந்திரத்தில், இவ்வளவும் இதற்கு மேலும் சயமை முறைகள் உள்ளடக்கமாக உள்ளன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஆளவந்தார்களின் இக் சயமை முறைகளுக்கு, நமது கழகத்தை வேமபெனக் கருதிக்கொண்டிருக்கும் இரண்டொரு காங்கிரசு எதிர்க் கட்சியினரும், மக்களுக்கு ஆற்ற வேண்டிய தங்கள் தலையாய கடமையை மறந்து, மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் ஊக்கமளிப்பது எதிர்பார்க்கக் கூடியதாகும்.

சனநாயகம் பேசினபோதிலும், உண்மையான சனநாயகத்தை வாழச் செய்ய வேண்டும் என்பதில் காங்கிரசுக் கட்சியினருக்கும் அக்கரை கிடையாது; தேர்தலில் காங்கிரசை எதிர்க்கும் அதே நேரத்தில் நமையும் எதிர்த்து அழித்துவிட வேண்டும் என்பதைத்தவிர்த்து, அம்மாற்றுக் கட்சியினருக்கும் சனநாயக வாழ்வில் உளப்பூர்வமான விருப்பம் கிடையாது.

நமது கழகத்தின் வளர்ச்சியிலும் வெற்றியிலும், தங்கள் கட்சியின் சரிவும் சீர்குலைவும் அடங்கி இருப்பதாக அம்மாற்றுக் கட்சியினர் சரியாகவோ தவறாகவோ ஏற்கனவே தீர்மானித்துக் கொண்டுள்ளனர்.

எனவே, தேர்தல் களத்தில் காங்கிரசை எதிர்த்து நாம அறப்போர் புரியும் இத்தருணத்தில், நம்மீது இடுக்கித தாக்குதல் நடத்த, அம்மாற்றுக் கட்சியினர் துடிதுடிப்பதில் வியப்பொன்றுமில்லை.

ஆண்டால் தாங்கள் ஆள வேண்டும்; இல்லையேல் காங்கிரசுக் கட்சி ஆளவேண்டும் என்ற சனநாயக விரோத அடிப்படையின் மீது, தங்கள் தேர்தல் போர்முறையை வகுத்துக் கொண்டிருப்பவர்கள அம்மாற்றுக் கட்சியின என்பது மிகையாகாது.

எதிர்க்கட்சியாக இயங்குவதற்குக்கூட ... ங்கள் கட்சிக்குத்தான உரிமையும் தகுதியும் உண்டென்று பிடிவாத நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் அம்மாற்றுக் கட்சியினர் என்பது, கல்லின் மேல் செதுக்கிய வாசகத்திற்கொப்பாகும்.

எனவே, ஆளும் கட்சியாகவோ அல்லது எதிர்க்கட்சியாகவோ நமது கழகம் தேர்தலில் வாகை சூட இருப்பதை கேள்வி அளவிலும்கூட தாங்கிக்கொள்ள அமமாற்றுக்கட்சியினர் விரும்பவில்லை. அவ்வாறு தாங்கிக்கொள்ளுவது அவர்களால் இயலவும் இயலாது.

இவ்வளவு விளககமாகக் குறிப்பிடுவது, காங்கிரசுக் கட்சியை எதிர்க்கும் அதே நேரத்தில் நமது கழகத்தையும் வீழ்த்தத் திட்டமிடும் இரண்டொரு மாற்றுக் கட்சியை மாசுபடுத்துவதற்காக அல்ல என்பதைத தெளிவாக்க விரும்புகிறோம்.

இந்தத் தேர்தல் களத்தில் போராடப் புகும் கட்சிகளுக்குள்ளாக இருந்துவரும் உறவு முறைகளையும் நடைமுறைப் போக்குகளையும் நாம் புரிந்து கொள்ளுவதின்மூலம்தான், அதற்கொததவகையில் நமது தேர்தல் அறப்போராட்ட செயல் முறையை வகுத்துக் கொள்ளுவது சாத்தியமாகும்.

இத்தேர்தலில் நாம் பின்... வேண்டிய செயல் மு... குள்ள சிறப்பைப் போன்றே, அதை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதிலும் சிறப்பு இருக்க வேண்டும்.

தேர்தல் நேரத்தில் எரிச்சல் மூட்டுவர் எதிர்க்கட்சியினர்— முக மலர்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் நமது கழகத்தவர்கள்.

ஆத்திரமூட்டுவர் ஆளும் கட்சியினரும் பிறரும் — அதனை அலட்சியப்படுத்திவிட வேண்டும் நமது கழகத்தவர்கள்.

தாக்க வருவர் — நாவால் மட்டுமல்ல; கையில் கிடைத்ததைக் கொண்டும்; நமது கழகப் பெருங்காவலர் அண்ணா அவர்கள் அடிக்கடி நமது கழகத்தவர்களுக்கு அன்புக் காணிக்கையாக அளித்துவரும் 'தாக்குவர் — தாங்கிக் கொள்ள வேண்டும்' என்ற மூதுரையைப் பின்பற்ற வேண்டும் நமது கழகக் காளையர்கள்.

அம்மூதுரையில்தான் நமது முற்கால வெற்றி முழுவதும் அடங்கி இருக்கிறது என்ற மகத்தான உண்மையை நமது கழகத்தவர் அனைவரும் அறிந்தே இருக்கின்றனர். எனவே, இத்தேர்தல் போர்க்களத்திலும், எதிர்க்கட்சியினர் 'தாக்குவர் தாங்கிக் கொள்ளவேண்டும்' என கழகத் தோழர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

மைசூரில் கன்னடம் ஆட்சி மொழியாகும்

பெங்களூர், டிச. 29—

"மைசூர் மாநிலத்தில, கீழ்க் கோர்ட்டுகளிலும், மாவட்ட—தாலுகா நிர்வாகங்களிலும ஓரளவுக்கு இப்போது கன்னடம் ஆட்சி மொழியாக உபயோகப்படுத்தப்படுகிறது. சரியான நிர்வாகப் பதங்கள், போதிய அளவில் கன்னட டைப்ரைட்டர்கள் இல்லாமையால் கன்னடத்தை உடனடியாக ஆட்சி மொழியாக்கிக்கொள்வதற்கு முடியாமலிருக்கிறது. இருப்பினும, மைசூர் சர்க்கார் எல்லா நிர்வாக அலுவல்களையும் படிப்படியாகக் கன்னட மொழியில நடத்துவது பற்றி யோசித்து வருகிறார்கள்; இதற்கென குழு ஒன்று நியமிக்கவும உத்தேசிக்கப்பட்டிருக்கிறது" என்று, கல்வி அமைச்சர் மஞ்சப்பா தெரிவித்துள்ளார்.

நடுக்கடலில் கப்பலின் நிலையறிய 'வர்ண ராடார்'!

புயலும் கொந்தளிப்பும் நிலவும் கடலில செல்லும் கப்பலின் நிலையை, அதன் 'ஆப்பரேடர்' திரையில் சுலபமாகப் பார்ப்பதற்கான வகையில் 'வர்ண ராடார்' முறையொன்றை அமெரிக்கா கண்டுபிடித்துள்ளதாம்.

நடுக்கடலில கப்பல்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வதைத் தவிர்க்க இந்தச் சாதனம் பயன்படுமாம்.

விரைவில் நடவடிக்கை எடுக்கச் சிபாரிசு

புதுடில்லி, டிச. 31—

முக்கியமான விவசாய உற்பத்திப் பொருள்களுக்குக் குறைந்தபட்ச விலைகளை நிர்ணயம் செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாநில விவசாய அமைச்சர்கள் மாநாடு சிபாரிசு செய்திருக்கிறது.

இரண்டாவது திட்டகாலத்தில், ஜப்பானிய முறை நெல் சாகுபடியின் பரப்பளவின் உச்ச அளவு 40 இலட்சம் ஏகராவிலிருந்து 80-இலட்சம் ஏகராவாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் பிரதமர் சுராவர்த்தி, அமெரிக்காவுக்கு வருகை தருமாறு ஐசனோவர் அனுப்பியிருந்த அழைப்பை பிராகரித்துவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

63 சதவிகித கிராம மக்கள் கடனாளிகளா யிருக்கின்றனர்

தானியங்களையும் கடன் கொடுத்து வாங்கும் முறை நிலவுகிறது

'ரிசர்வ் பாங்கி சர்வே' தரும் தகவல்

விவசாயிகளாக இல்லாதவர்களைவிட விவசாயிகளே பெரிதும் கடன்காரர்களாக இருந்துவருகிறார்கள். கடன் தொகை வகையிலும் விவசாயிகளே மிஞ்சிக் காணப்படுகிறார்கள்.

கடன் பட்டுள்ள விவசாயிகளிலும், கீழ்நிலையில் இருப்பவர்களைக்காட்டிலும் உயர்நிலையில் இருப்பவர்களே பெரும் அளவில் கடன்பட்டிருப்பவர்களாகக் காணப்படுகிறார்கள்.

பல்வேறு அளவில் நிலம் படைத்துள்ளவர்களிடை காணப்படும் கடன் நிலையை நோக்கும்பொழுது, அதிகபட்ச நிலம் படைத்திருப்பவர்களைவிட குறைந்தபட்ச நிலம் பெற்றிருப்பவர்களே மிதமிஞ்சிய கடன்பட்டவர்களாகத் தெரியவருகிறார்கள்.

—இவ்வாறு, ரிசர்வ் பாங்கியின் கட்டளைக்கிணங்க செயல்பட்ட அகில இந்திய கிராமக் கடன் ஆய்வுக் குழு அறிவித்திருக்கிறது.

அவ்வறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது :—

கிராமங்களில் வாழும் 63 சதவிகித குடும்பங்கள் கடன் தொல்லைக்கு ஆளாகி உள்ளன.

குடும்பம் ஒன்றுக்கு ரூ. 364 வீதம், 69 சதவிகித கிராம விவசாயக் குடும்பங்கள் கடன்பட்டுள்ளன.

விவசாயத்தில் ஈடுபடாத குடும்பங்களில் 52 சதவிகித குடும்பங்களே, குடும்பம் ஒன்றுக்கு ரூ 129 விகிதம் கடனில் சிக்கி இருக்கின்றன.

நாணயச் செலாவணி முறைக்கும், வியாபாரப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கும் சிறப்பளித்து வரும் கிராமங்களில்தான், கிராமக் கடன் சுமை மிகுந்திருக்கிறது.

கிராமக் கடன் சுமையின் அளவு பொதுவாகக் கூடுதலாக இருந்த போதிலும், விவசாயக் குடும்பங்களுடைய சொத்துக்களின மதிப்பைக்கொண்டு ஆராயுமிடத்து, எல்லாப் பகுதிகளிலும் உள்ள பல் வேறுபட்ட விவசாயக் குடும்பங்களிடை இருந்துவரும் கடன் சுமை சராசரியில் சுமாரானதாக இருந்து வருகிறது.

நாடு முழுவதிலும் உள்ள உயர் நிலை விவசாயிகளுடைய சொத்தின் மதிப்பில் கடன் சுமை 51 சதவிகிதமாகவும், கீழ்நிலை விவசாயிகளுடைய சொத்தின் மதிப்பில கடன் சுமை 87 சதவிகிதமாகவும இருந்துவருகிறது.

குறைந்த அளவில் இக்கடன் சுமைக்கு ஆளாகியுள்ள பகுதியாக மேற்கு வங்கம், அசாம், ஒரிசா ஆகிய மாகாணங்களும், அதற்கு முழுதும் நேர்மாறாக அதிகக் கடன் பளுவைத் தாங்கி நிற்கும் பகுதியாக பம்பாய், பஞ்சாப் ஆகிய இரண்டு மாகாணங்களும், 1929—30-ம் ஆண்டிலும், 1951—52-ம் ஆண்டிலும இருந்துள்ளன.

அதே காலத்தில் நாணய முறையில் குறிப்பிட வேண்டுமானால், சென்னையிலும் உத்திரபிரதேசத்திலும் கிராமக் கடன் சுமை குறிப்பிடத்தகுந்த வகையில் கூடுதலாக இருந்திருக்கிறது. இதற்கு பணத்தின மதிப்பில் ஏற்பட்ட பெரிய மாறுதலே காரணமாகும்.

கிராமக் குடும்பங்களின் கடன் பளுவைக் குறைக்க பலப் பல மாகாணங்களில் ஆட்சியினர் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளனர். அந்த நடவடிக்கைகள் அனைத்தும், பஞ்சாப், பெங்கால், மத்திய பிரதேசம் நீங்கலாக, மற்ற மாகாணங்களில், பொருட்படுத்தத் தகுந்த மாற்றங்களை விளைவாக்கத் தவறிவிட்டன.

விவசாயக் குடும்பங்கள் பட்டுள்ள கடனில் சரிபகுதி குடும்ப நிர்வாகத்திற்கும், கால் பகுதிக்குச் கொஞ்சம் கூடுதலாக நிலத்திற்கான மூலதனச் செலவிற்கும், மீதமுள்ளதை அப்பொழுது அப்பொழுது தேவைப்படும் உழவு - மற்ற இதரச் செலவுகளுக்காகவும் கடன் பட்டதாகும்.

ஆனால் விவசாயிகளாக இல்லாதவர்கள் பெற்றுள்ள கடனில் 70 சத விகிதம் குடும்ப நிர்வாகத்திற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மீதம் விவசாயத்திற்காகவும் இதர துறைகளுக்காகவும் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

விவசாயிகள் பெற்றுள்ள கடன் தொகையில் 47 சதவிகிதம் குடும்பச் செலவிற்காகவும், விவசாய மூலதனச் செலவிற்காக 32 சதவிகிதமும் செலவழிக்கப்பட்டுள்ளன.

தானியக் கடன்கள்

தானியங்களைக் கடனாக வாங்குவதும், ஆண்டு முடிவில் அவற்றை முழுவதுமாகத் திருப்பித் தருவதுமான தானியக் கடன் முறையும் நிலவுகிறது.

ரொக்கக் கடன்கள்

தானியக் கடன் முறை நிலவும் பிரதேசங்களில், ரொக்கமாகக் கடன் வாங்குவதும், அதனை ஆண்டு முடிவில் திருப்பித் தருவதுமான ரொக்கக் கடன் முறை மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

முடியவில்லை

சேகரிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களைக்கொண்டு, கிராம மக்களின் நிகர சேமிப்பு எவ்வளவு என்பதையோ, அந்தச் சேமிப்பு எந்த வழிதுறைகளில் செலவிடப்படுகிறது என்பதையோ அறிய முடியவில்லை. என்றாலும், மொத்த சேமிப்பு எவ்வளவு இருக்கலாம் என்பதையும், அது மூலதனச் செலவுகளுக்காக உபயோகிக்கப்படுகிறது என்பதையும் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

மொத்தச் சேமிப்பு நான்கு பிரதான வழிகளில் செலவிடப்படுகின்றது; ஒன்று—நிலம், கால்நடை வாங்குவது தவிர்த்த மூலதனச் செலவு

பழைய கடன்களைத் திருப்பித் தருதல்; குடியிருக்கும் இல்லங்களைத் திருத்தி அமைத்தல்--பழுது பார்த்தல்; மற்றுமொன்று நிதிகளுக்குத் தருதல்.

இந்த ஒவ்வொரு வழியிலும் சுமார் 20 சதவிகிதம் செலவிடப்படுகிறது என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

6-இலட்சம் சைக்கிள்கள் உற்பத்தியாயிற்றும்!

புதுடில்லி, டிச. 31—

1956-ம் ஆண்டில் புதிய தொழில் நிறுவனங்கள் ஆரம்பிக்கவும், பழைய நிறுவனங்களை விஸ்தரிக்கவும 860 புதிய லைசென்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன; இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் துணி, சிமெண்டு, கார், சைகிள், எஃகு, உப்பு, சிகரெட்டு, பிளேடுகள் ஆகியவற்றின் உற்பத்தி வெகுவாக உயர்ந்திருக்கிறது,' என்று அதிகாரபூர்வமான புள்ளி விவரங்கள் மூலம் புலனாகிறது.

சென்ற ஆண்டில் துணி உற்பத்தி $509\frac{1}{2}$ கெஜமாக இருந்தது; இவ்வாண்டில் 14-கோடி கெசம் அதிகரித்திருக்கிறது.

சைகிள் உற்பத்தி இவ்வாண்டில் 1-இலட்சம் அதிகரித்திருக்கலாம் — ... ாவது, 6,15,000 சைக்கிள்களாகும்.

உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களின் இறக்குமதி குறைக்கப்படுகின்றது!

'தரம்' குறையாமல் இந்தியாவில் உற்பத்தியாகும் என நம்பிக்கை?

இந்தியப் பேரரசின் இறக்குமதிக் கொள்கை

புதுடில்லி, டிச. 30—

ஆறுமாத காலத்திற்கு அமுலிலிருக்கும் வகையில், சுமார் 500 பொருட்களின் இறக்குமதி 'கோட்டா' இந்திய சர்க்காரால் வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கின்றன. முக்கியப் பொருள்களல்லாத வேறுபல பொருள்களுக்கு 'லைசென்சு'கள் கிடைக்காது.

இறக்குமதிக் குறைப்பின் விளைவாகச் சுமார் ரூ. 30 கோடிக்கு வெளிநாட்டு நாணயச் செலாவணி வசதி மிச்சப்படுமென மதிப்பிடப்படுகிறது.

இறக்குமதி குறைக்கப்பட்ட பொருட்களின் விலைகள் இனி உயரக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டுத் தொழில்களின் வளர்ச்சியைக் கருத்திலகொண்டு இறக்குமதிகளில் இந்த 'வெட்டு' ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அனேகமாக எல்லாப் பொருள்களின் இறக்குமதியையும் குறைப்பதற்கு முயற்சி செய்யப்பட்டிருந்த போதிலும், உள்நாட்டிலேயே உற்பத்தியாகக்கூடிய பொருட்களின் இறக்குமதிகள் அதிகமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. உள்நாட்டு உற்பத்தியாளர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் தரத்தைக் குறைத்துவிடாமல் உற்பத்தியைப் பெருக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டு நாணயச் செலாவணி வசதி—அதிலும் குறிப்பாக ஸ்டர்லிங் நிதி, சென்ற சனவரிக்குப் பின் பெரிதும் குறைந்துவிட்டதாலேயே இறக்குமதிகள் இவ்வளவு கடுமையாகக் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சென்ற சனவரியில் இந்தியாவின் ஸ்டர்லிங் மிச்சம் ரூ. 472 கோடியாக இருந்தது; இது சென்ற மாதத்தில் (நவம்பரில்) ரூ. 539 கோடியாகக் குறைந்துவிட்டது; இம்மாதம் (டிசம்பர்) 21-ந் தேதி, இது ரூ. 536 கோடியாகக் குறைந்தது.

இறக்குமதி 'கோட்டா' குறைக்கப்பட்ட பொருள்கள்

பழங்கள், சில வாசனைத் திரவியங்கள், பாக்கு, மதுவகைகள், சுருட்டுகள், சிகரெட்டுகள், அலங்காரப் (டாய்லெட்) பொருள்கள், பென்சில்கள், காகித வகைகள், கம்பளம், பருத்தி, செயற்கைப் பட்டுத் துணி வகைகள், கரண்டி வகையறாக்கள், கண்ணாடித் தகடுகள், சைக்கிள்கள், பேடண்ட் மருந்துகள், தாரிலிருந்து தயாரிக்கப்படும் சாய வகைகள், சில இயந்திர வகைகள் முதலிய பொருள்கள் இவற்றில் முக்கியமானவையாகும்.

தாராள இறக்குமதி லைசென்சு மறுப்பு

தாராள லைசென்சு கொடுக்கப்பட்டு வந்த ரோசினம் வகைகள், கஸ்தூரி, எண்ணெய், சில விளையாட்டுச் சாமான்கள் முதலியவற்றின் இறக்குமதிகள் இப்பொழுது நிறுத்தப்படுகின்றன.

ஏற்கனவே நாட்டில் கையிருப்பில் உள்ளதும், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள லைசென்சுகளின்படி இனி இறக்குமதியாகக்கூடியதுமான இப்பொருள்கள் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வளவு சதவிகிதம்?

மது வகைகளின் இறக்குமதி அடிப்படை வருடக் கோட்டாவில் 40 சத விகிதத்திலிருந்து 10 சத விகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மதுபானங்களின் விலை அதிகரித்தாலும் சர்க்கார் அதுபற்றிக் கவலைப்படமாட்டார்கள்.

பழ வகைகள், கட்டிப்பால், பால் பவுடர், கோகோ, ஜாம் ஜெல்லி பழ ரசங்கள் ஆகியவற்றின் இறக்குமதி [illegible] டுள்ளது; ஆனால் [illegible] திட்டத்தின்கீழ் பவுடர் பால், வெண்ணெய் முதலிய பொருள்கள் கிடைக்கும் என்று எடுத்துக் கூறப்பட்டது.

பக்குவம் செய்யப்பட்ட புகையிலை இறக்குமதி அடிப்படை வருடக் கோட்டாவைப்போல் 100 சத விகிதத்திலிருந்து 25 சத விகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

சினிமாப் படங்களின் கோட்டா பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் ஹாலிவுட் படங்களும், மற்ற வெளிநாட்டுப் படங்களும் இந்தியாவுக்கு வருவது குறையும்.

தேங்காய் எண்ணெய் இறக்குமதி 75 சத விகிதத்திலிருந்து 50-சத விகிதமாகக் குறையும்.

குடைகள், வாசனை சோப்பு, துணி சோப்பு, சில தினுசு கத்திகள் முதலியவற்றின் இறக்குமதி அனுமதிக்கப்படாது.

இயற்கை எண்ணெய் வகைகள் 60 சதவிகிதத்திலிருந்து 25 சத விகிதமாகக் குறையும்.

அச்சடிக்கும் காகிதக் கோட்டா 50 சதவிகிதத்திலிருந்து 25 சத விகிதமாகக் குறைகிறது. சுவரொட்டி நோட்டீஸ் முதலிய காகிதக் கோட்டா 40 சத விகிதத்திலிருந்து 25 சத விகிதமாகக் குறையும்.

பௌண்டன் பேனா இறக்குமதி 15 சத விகிதத்திலிருந்து 5 சத விகிதமாகக் குறையும்.

செயற்கைப்பட்டு நூல் கோட்டா 40 சத விகிதத்திலிருந்து 25 சத விகிதமாகக் குறையும்.

இரப்பர் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு!

கடந்த 3 மாத காலமாக, மலேயாவிலுள்ள இரப்பரின் விலை ஒரு சீராக ஏறிக்கொண்டே வந்ததை ஒட்டி, வருகிற புத்தாண்டிலிருந்து, அங்குள்ள இரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் 3,20,000 தொழிலாளர்களும், நாளொன்றுக்கு சராசரியாக 33 சதம் அதிகமாகக் கூலிபெறுவர் என்று கூறப்படுகிறது.

சிமெண்டு பற்றாக்குறை

அடியோடு ஒழிந்துவிடுமாம்

விருதுநகர், டிச. 31—

இராசபாளையத்தில் ஒரு சிமெண்டுத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு லைசென்சு வழங்கப்பட்டிருப்பதாக மத்திய வணிகத் தொழில் அமைச்சர் கூறியுள்ளார்.

'இந்தியாவில் இப்பொழுது 27 சிமெண்டுத் தொழிற்சாலைகள் உள்ளன; இவை 60 ஆக அதிகரிக்கப்படும்; பிறகு சிமெண்டு பற்றாக்குறை அடியோடு ஒழிந்துவிடும்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

9 இலட்சம் பவுன் மதிப்புள்ள சாமான்கள்

துர்க்காபூர் தொழிற்சாலைக்கு வாங்கப்படுமாம்

துர்க்காபூரில் நிறுவப்படும் இரும்பு—உருக்குத் தொழிற்சாலைக்குத் தேவையான பட்டறைச் சாமான்களையும் இயந்திரக் கருவிகளையும், பிரிட்டனிலுள்ள நிறுவனமொன்றின் மூலம் கொள்முதல் செய்யப்படும்; இவற்றின விலை மதிப்பு 9 இலட்சம் பவுன்கள்

இடைநிலைக் கல்வி தரக் குறைபாடுகள்

களைந்தெறிய முயற்சிகள்?

கரீம்கஞ்ச், டிச. 27—

இப்போதிருக்கிற இடைநிலைக் கல்வியின் தரத்திலுள்ள குறைபாடுகளைக் களைவதற்கென, அக்கல்வித் துறையை மாற்றியமைக்கப் பெரும் அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று உமாயூன் கபீர் என்ற பாராளுமன்ற உறுப்பினர் கூறியிருக்கிறார்.

இந்த முயற்சியில் முழு வெற்றி கிடைக்கவேண்டுமானால், நல்ல தகுதியும் தேர்ச்சியும் பெற்ற ஆசிரியர்களும் தேவைப்படுவர் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நெசவாளருக்குக் கூட்டுறவுத் தொழிற்சாலைகள்

கேரளத்திற்கு டில்லி சர்க்கார் கடனுதவி தருகிறது

புதுடில்லி, டிச. 28—

மத்திய சர்க்கார் நிதி உதவியுடன், திருவனந்தபுரத்தில் நெசவாளர்களுக்கென இரண்டு கூட்டுறவுத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படுமாம்.

இவற்றில் ஒன்று கைத்தறிகளையும், மற்றொன்று விசைத் தறிகளையும் பயன்படுத்தி வேலை செய்து வருமாம்.

நெசவாளர்களின் கூட்டுறவுத் தொழில் நிறுவனம் மொத்தம் 200 நெசவாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும். அதில் மொத்தம் 159 கைத்தறிகள் வேலை செய்யும். இந்தக் கூட்டுறவுத் தொழில் நிறுவன உதவிக்காக மத்திய சர்க்கார், கேரள சர்க்காருக்கு மொத்தம் ரூ. 2,08,100 வட்டியில்லாத கடனாக வழங்கியுள்ளனராம்.

இத்தொகை, நெசவாளர்களுக்குப் பங்கு மூலதனம் வழங்கவும், கைத்தறிகளுக்கான நடைமுதல் மூலதனத்துக்காகவும் பயன்படுத்தப்படுமாம்.

இந்தக் கூட்டுறவு ஆலையில், மாதந்தோறும் 24,000 கெஜம் துணி உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம். தறியொன்றுக்கு நாளொன்றுக்கு 6-கெஜம் வீதம் உற்பத்தி செய்யப்பட்டு, மாதம் 25 நாள் வேலை நடைபெற்று வரும் என்ற அடிப்படையில் இந்த அளவு கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

விசைத்தறிக் கூட்டுறவுத் தொழில் நிறுவனம் மொத்தம் 25 நெசவாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும். அதில் மொத்தம் 29 விசைத்தறிகள் வேலை செய்துவரும்.

இந்த நிறுவன உதவிக்கு மத்திய சர்க்கார், கேரள சர்க்காருக்குக் கடனாக மொத்தம் ரூ. 94,125 வழங்கியுள்ளனர்.

இந்தத் தொகை, நெசவாளர்களின் பங்கு மூலதனத்துக்காகவும் தறிகளுக்கான நடைமுதல் மூலதனத்துக்காகவும், நிலம், கட்டிடங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காகவும் பயன்படுத்தப்படும்.

இங்கு மாதம் ஒன்றுக்கு சராசரி 19,500 கெஜம் துணி வீதம் உற்பத்தி செய்யப்படுமாம்.

நெசவுத் தொழில் பயிற்சி நிலையங்கள்

நான்கு தமிழ் மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கு அனுமதி

நெல்லை, டிச. 31—

சேலம், மதுரை, நெல்லை—இராமநாதபுரம், கடலூர் ஆகிய இடங்களில் நெசவாளர் கூட்டுறவுச் சங்க சிப்பந்திகளுக்கான நெசவுத் தொழில் பயிற்சித் தொழில் நிலையங்கள் ஏற்படுத்திக்கொள்ள மத்திய சர்க்கார் அனுமதித்திருப்பதாகத் தெரிகிறது.

இந்நிலையங்களில் 3-மாத காலத்திற்கு 25-பேர்களுக்கு பயிற்சியளிக்கப்படும்; பயிற்சி காலத்தில் ஒவ்வொருவருக்கும் ரூ. 25 உதவித்தொகை தரப்படும்.

வேதனையான விசித்திரம்!

தாராபுரம், டிச. 27—

தாராபுரத்தை அடுத்துள்ள கோலாத்துப்பாளையம் எனும் ஊரில் ஒரு கிராம மருத்துவச்சாலை ஏற்படுத்தப்பட்டு, அங்குள்ள அலமாரிகள் அனைத்திலும் ரூ. 1,500-க்கும் அதிகமாக மதிப்புள்ள மருந்துகளும் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் வேடிக்கை என்னவென்றால், அங்குள்ள மருந்துகளைப் பயன்படுத்தவோ, நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்யவோ ஒரு டாக்டர்கூடக் கிடையாது!

கடந்த 1½ - வருடங்களாக, வெறும் கட்டிடமும் மருந்துகளும்தான் இருக்கின்றனவே தவிர, இதுவரையில் ஒரு மருத்துவர்கூட அங்கு வந்தது கிடையாதாம்!

அண்மையில் அவ்வூராண்மைக் கழகத்தவர், கோவை மாவட்டக் கழகத்தவரை அணுகி, மூலனூரிலுள்ள கிராம மருத்துவரை அடிக்கடி — வாரத்துக்கு இருமுறையேனும் அங்குவந்து நோயாளிகளைக் கவனிக்கச் செய்ய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர் என்று தெரிகிறது.

1,80,000 அம்பர் 'சர்க்கா'க்கள் உற்பத்தியாகுமாம்!

புதுடில்லி, டிச. 31—

1957—58-ம் ஆண்டிற்கு 'அம்பர் சர்க்கா' சம்பந்தமான திட்டத்தை இந்திய சர்க்கார் பூர்த்தி செய்துவிட்டதாம்! இந்தத் திட்டத்திற்கிணங்க 1,80,0000 'அம்பர் சர்க்கா'க்கள் உற்பத்தி செய்யப்படுமாம்!

புற்று நோய்க்கு புதிய சிகிச்சை முறை!

புற்றுநோய் சிகிச்சையில் இப்பொழுது உபயோகிக்கப்படும் எக்ஸ்ரேக்களைவிட, ரேடியோ கதிரியக்க கோபால்ட் அதிக நன்மை தரக்கூடியது என்று நம்பப்படுகிறதாம்.

'ரேடியோ கதிரியக்கக் கோபால்ட்' என்பது அணுசக்தியின் ஒரு சமாதானப் பொருளாகும்.

பென்சில்வேனியாவிலுள்ள பிலடெல்பியா புற்றுநோய்க் கழகத்தில் சிகிச்சை பெறும் நோயாளிகள், 8-லிருந்து 10 நிமிடம்வரை இம்முறை சிகிச்சை அளிக்கப்படுகின்றனராம்.

கதிர்களை வெளிக்கொட்டும் 'ரேடியோ கதிரியக்கக் கோபால்ட் குளிகை' உடலில் சுற்றிவந்து அதன் கதிர்கள், புற்று இருக்கும் பாகத்தில் ஊடுருவி குவிக்கப்படுகின்றனவாம்!

குஷ்ட நோயைத் தடுப்பதற்குத் திட்டம்

அகில இந்திய அடிப்படையில் சட்டமியற்றப்படுமா?

புதுடில்லி, டிச. 28—

குஷ்டரோகத்தை ஒரு பொது சுகாதாரப் பிரச்சினையாகக் கருதி, அந்நோயைத் துவக்க நிலையிலேயே தடை செய்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டும், மாநிலத்திற்கு மாநிலம் கட்டுப்பாடற்ற முறையில் குஷ்டரோகிகள் செல்வதனால், ஒரு பிரதேசத்திலிருந்து மற்றொரு பிரதேசத்துக்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்காகவும், அகில இந்திய அடிப்படையில் சட்டமியற்றப்பட வேண்டும் என்று, சமீபத்தில் ராஞ்சியில் நடைபெற்ற மத்திய சுகாதாரக் கௌன்சில் கூட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

இதுவரையில் 13 மாநிலங்களில் 4 சிகிச்சை - ஆராய்ச்சி நிலையங்களும் 30 துணை நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், மாநிலத் திட்டங்களில் குஷ்டரோகத் தடை நடவடிக்கைகளுக்காக மொத்தம் ரூ [illegible]8,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை — சீனா

பண்டமாற்று ஒப்பந்தம்

கொழும்பு, டிச. 31—

இலங்கை—சீனா 5 வருட ஒப்பந்தத்தின் இறுதி வருடமான அடுத்த ஆண்டில், இலங்கையும் சீனாவும் இரப்பர், அரிசியை பண்டமாற்று செய்துகொள்ளுமென்றும், இதற்கான ஒப்பந்தம் ஒன்று இன்று இரு நாடுகளுக்குமிடையே கையெழுத்தாயிற்று என்றும் தெரிகிறது.

இந்த ஒப்பந்தத்தின்கீழ், சீனா, இலங்கையிலிருந்து 50,000 டன் இரப்பரை இறக்குமதி செய்யும் என்றும், அதே நேரத்தில் 2,70,000 டன் அரிசியை இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அணுசக்திக் கப்பல்!

1959-ல் தயாராகிவிடும்

வாஷிங்டன்:

ஆழ்கடலில் செல்லக்கூடிய—உலகிலேயே முதன் முதலாக அணுசக்தியால் இயங்கும் வியாபாரக் கப்பலைக் கட்டுவதற்கான வேலையை 'சாத்தியமான முறையில் விரைவில்' ஆரம்பிக்க, அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் உத்தரவிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

"இம்மாதிரிக் கப்பல்களெல்லாம் ஒரு நாள், உலக நாடுகளை சமாதான முறையில் வர்த்தகத்தில் இணைத்துவிடும்" என்று ஐசனோவர், அவ்வுத்திரவின்போது குறிப்பிட்டிருக்கிறார்!

இந்தக் கப்பலின் வேகம் 21 'நாட்'கள் (கடல் மைல்); அது 100 பிரயாணிகளை ஏற்றிச்செல்லும்; 12,000 டன் சரக்குகளை ஏற்றிக்கொள்ள இதில் வசதியிருக்கும்.

1959-ல் இது கட்டிமுடிந்து கடலில் செல்வதற்குத் தயாராகிவிடும்.

திருமணம்

13—12—56 காலை 9 மணிக்கு சென்னை - இராயப்பேட்டை அந்தோணி தெரு, எண். 5, ஏ இல்லத்தில் தோழர் டி. கே. முத்துச்சாமி தலைமையில் தோழர் ஜி எம். தம்பன்—தோழியர் சுமதி திருமணம் நடைபெற்றது. தோழர்கள் கோ. இளவரசு, டி. என். கருணாகரன், காரண துரைக்கண்ணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். அன்று மாலை 6 மணிக்கு 'உட்லண்ட்ஸ்' ஓட்டலில் நடைபெற்ற விருந்தில் தோழர்கள் டி. கே. சண்முகம், பிரண்ட் இராமசாமி, ஜெமினி கணேசன், ரா. சுப்பிரமணியம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். மணமக்களுக்கு பல தோழர்களால் ஏராளமான பரிசுகள் வழங்கப்பட்டன. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

பிறப்பு

11-12-56ல் திருப்பூர் தோழர் கே. பழனிச்சாமி அவர்களது துணைவியார் தோழியர் இலக்குமி அவர்கள் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

• • •

சென்னை அயன்புரம் தோழர் சி தங்கச்சாமி அவர்களது துணைவியார் 8—12—56ல் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பு தரப்பட்டது.

மறைவு

தி. மு. கழக நெடுநாள் அனுதாபியும், பாளையங்கோட்டை மணி மார்க் பொடிவெடி காரியாலய பங்குதாரருமான திரு. ஏ. தம்பையா அவர்களது துணைவியார் திருமதி ஜானகி அம்மையார், கடந்த சில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்து 16-12-56-ல் தாத்தக்குடியில் இயற்கையெய்தினார். இதையொட்டி, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 தரப்பட்டது.

வாக்காளருக்கு அண்ணா அறைகூவல்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காட்டுவார்களேயானால், கழகம் நிச்சயம் வெற்றிபெறும்.

"மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டியதெல்லாம் — தங்களைக் காக்கப் போராடுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர வேறு எந்தக் கட்சியைத் தேர்ந்தெடுக்க முடியும் என்பதைத்தான்!

விட்டுக்கொடுப்பதா?

"கொள்கையில் உறுதியும், கொண்ட கொள்கைக்காக உயிரையும் திரணமாக மதிக்கும் தியாக சுபாவமும் கொண்ட கழகம், மக்கள் நலனுக்காக விட்டுக்கொடுக்காமல் உறுதியோடு போராடும் என்பதை அவர்கள் உணர வேண்டுகிறேன்.

அருகிலிருப்பவர்களை மறந்துவிட்டார்கள்!

"கழகம் தேர்தலில் ஈடுபடுவதை அறிந்ததும் காங்கிரசார், 'கழகத்திலிருப்பவர்கள் எல்லாம் வெள்ளைக்காரருக்குக் குலாம்கள்' என்று பேச முற்பட்டிருக்கின்றனர்.

"பரமேசுவரன், மாணிக்கவேலர், இராமநாதபுரம் இராஜா போன்றவர்களை அருகில் வைத்துக்கொண்டிருக்கும் மந்திரிகளா இப்படிப் பேசுவது?

"குழாயடியில், கெட்டுப்போன ஒருத்தி, உத்தமியான மற்றொருத்தியை, 'கெட்டுப்போனவள்' என்று வாய்கூசாது பேசுவதற்கும், காங்கிரஸ் மந்திரிகள் பேசுவதற்கும் வித்தியாசம் தெரியவில்லையே!

"வெள்ளைக்காரருக்குக் குலாம் என்று பேசுகிறாரே மந்திரியார், கூறுவாரா—நாங்கள் எந்தக் காலத்திலாவது வெள்ளையரிடத்தில் ஒரு அரைக்காசு சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்ததாக?

"அன்று முதல் இன்று வரை, என் உள்ளத்திற்குச் சரி என்று பட்டதைச் சொல்லி, செய்துவரும் என்னைத் தூற்றுகிறார்—வெள்ளையரிடம் சம்பளம் வாங்கிக்கொண்டு பிரச்சாரகராயிருந்த ஒருவரை தனக்குப் பக்கத்தில் மந்திரியாக வைத்துக்கொண்டிருப்பவர்!

என் பழுதா என்ன?

"காமராசர் கூறுகிறாராம்—'காங்கிரசில் பணக்காரர்களே இல்லை,' என்று! 'தேடித் தேடிப் பார்க்கிறேன்; ஒரு பணக்காரர்கூட அகப்படவில்லை,' என்று அவர் கூறியதாகச் செய்தி ஒன்று பார்த்தேன்!

"குன்னியூர் சாம்பசிவம், இராமநாதபுரம் இராஜா, பெரிய வியாபாரியான டி. டி. கே. முதலியவர்கள் எல்லாம் பணக்காரர்கள் அல்லவா? இவர்கள் எல்லாம் காங்கிரசில்தானே இருக்கிறார்கள்?

"காமராசர் இப்படிக் கூறியதற்கு இரண்டு காரணம் இருக்கலாம்—ஒன்று, அவருக்கு சற்று கண்பார்வை பழுதாகி இருக்கவேண்டும்; அல்லது, இவரைக்கண்டதும் பணக்காரர்கள், எங்கே ஐயாயிரம் கொடு—பத்தாயிரம் கொடு என்று கேட்பாரோ எனப் பயந்து, பணக்காரர்கள் ஓடி ஒளிந்திருக்க வேண்டும்.

"காங்கிரசில் இருக்கும் பணக்காரர்களின் பங்களாக்களை எல்லாம் படம் பிடித்துப் பத்திரிகையிலும் சுவரொட்டியிலும் போட்டுக் காட்டினால், மக்கள் புரிந்துகொள்கிறார்கள்—காங்கிரசில் பணக்காரர் இருக்கிறார்களா இல்லையா என்பதை!

எதற்காக தேடினார்?

'அது போகட்டும்; 'தேடித் தேடிப் பார்க்கிறேன்; கிடைக்கவில்லை' என்கிறாரே, காமராசர்! இவர் ஏன் பணக்காரர்களைத் தேடிப் போனார்? என்ன வேலை இவருக்கு அவர்களிடத்திலே? கேட்கமாட்டார்களா மக்கள்! பதில் கூறுவாரா காமராசர்?

மக்கள் சிந்திப்பதை உணர வேண்டாமா?

"இனி, காமராசர்கள், இது போன்ற வாதங்களால் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றிவிட முடியாது.

"மக்கள், பெண்வீட்டார் போன்றவர்கள்; பெண்ணைக் கொடுக்குமுன் 'பையன் பெண்ணை ஒழுங்காகக் காப்பாற்றுவானா? யோக்கியன்தானா? என்ன சம்பாதிக்கிறான்?'—என்றெல்லாம் கேட்பதுபோல, மக்களும் ஓட்டளிக்கு முன், 'யாருக்குத் தகுதி உண்டு, ஓட்டுப்பெற,' என்பதைச் சிந்திக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"உங்களுடைய நம்பிக்கைக்கும் ஆதரவிற்கும் இதுகாறும் பாத்திரமாகி வந்திருக்கும் தி. மு. கழகம், தேர்தலிலும் உங்களது ஆதரவை கோருகிறது. 'இந்தப் பிள்ளைக்குப் பெண் கொடுத்தால், அடுத்த ஆண்டில் உங்கள் வீட்டில் பேரன் தவழுவான்,' என்பதை நீங்கள் அறிவீர்கள்."

தூத்துக்குடி கி. மு. கொலை வழக்கில் தீர்ப்பு

தூத்துக்குடி, டிச. 31—

டேவிஸ்புரம் கிராம முன்சீப் ஆறுமுகம்பிள்ளை கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்ட 12 பேர்களையும் நகர சப்-மாஜிஸ்திரேட், செஷன்ஸ் நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பி வைத்தார்.

தங்களுக்குச் சாட்சிகள் இருப்பதாகவும், செஷன்ஸ் நீதிமன்றத்தில் அவர்கள் சாட்சியம் கூறுவர் என்றும் எதிரிகள் தெரிவித்தனர்.

செஷன்ஸ் நீதிமன்ற விசாரணை துவங்கும்வரையில் எதிரிகள் அனைவரும் தூத்துக்குடி சப்-ஜெயிலிலும், அப்ரூவர்கள் மூவரும் திருச்செந்தூர் சப்-ஜெயிலிலும் வைக்கப்பட வேண்டுமென சப் மாஜிஸ்திரேட் உத்திரவிட்டுள்ளார்.

திருப்பூரில்:

தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்

★

2—1—57 மாலை 6½ மணிக்கு, திருப்பூர் நொய்யல் நதி மைதானத்தில், திருப்பூர், பல்லடம் தி. மு. கழகக் கிளைகளின் சார்பில் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெறும். அண்ணா, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கோவையில்:

★

தி. மு. கழகத் தேர்தல் நிதி நாடகம்

3—1—57 இரவு 10 மணிக்கு, சண்முகா தியேட்டரில் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென அண்ணா, மற்றும் கழகத் தோழர்களும் நடிக்கும் 'சந்திரோதயம்' நாடகம் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

2—1—57 இரவு 7 மணியளவில், சென்னை — இராயபுரம், சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றப் பணிமனையில், தோழர் ச. பொன்னுரங்கம் தலைமையில 'மதமும் திருமணமும்' எனும் பொருள் பற்றித் தோழர்கள் இராவணன், முத்தரசன், சி. இளங்கோ, மற்றும் பலர் பேசுவர்.

தமிழ்நாடு சிறை சென்ற அரசியல் தியாகிகள் கூட்டம்

2—1—57 புதன் கிழமை, சென்னை—மயிலை தெற்கு மாடத் தெருவிலுள்ள வன்னியர் சத்திரத்தில், தமிழ்நாடு சிறை சென்ற அரசியல் தியாகிகள் சங்கச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

80 வயது நிரம்பிய ம. பி. முதலமைச்சர்

திடீரென இயற்கையெய்தினார்

புதுடில்லி, ஜன. 1—

80-ஆண்டு வயது நிரம்பியவரும் 1937-ம் ஆண்டு முதல் மத்தியப் பிரதேசத்தில், தொடர்ச்சியாக முதலமைச்சர் பதவியை வகித்து வந்தவருமான பண்டித ரவிசங்கர் சுக்லா, நேற்று பிற்பகல் புதுடில்லியில் திடீரென இயற்கையெய்தினார். அவரது சடலம் நேற்று பிற்பகல் விமானமூலம் போபாலுக்குக் கொண்டுவரப்பட்டு இன்று அரசாங்க மரியாதைகளுடன் இறுதிச் சடங்கு நடைபெறுகிறது.

அவருக்கு மனைவியும், ஆறு குமாரர்களும், இரு குமாரத்திகளும் இருக்கின்றனர்.

சென்னை, டிச. 31—

ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்தியதாக, சென்ற வாரத்தில் கைது செய்யப்பட்ட சுமார் 500 பீடித் தொழிலாளர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

* *

தி. மு. க. தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா அவர்களும் ● ● ● கழகத் தோழர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

★

ஜனவரி		ஜனவரி	
3:	கோவை நகர்	19:	கணியூர்
15:	பூந்தமல்லி (செங்கற்பட்டு மாவட்டம்)	20:	மதுரை நகர்
16:	காஞ்சிபுரம்	21:	திருச்சி நகர்
17:	சேலம் நகர்	22:	குமாரபாளையம்
18:	உடுமலை	23:	போளூர் வ. ஆ.
		24:	விழுப்புரம்

★

மேற்கண்ட தி. மு. க. கிளைகளின் நிர்வாகிகள், நாடக ஏற்பாட்டினைச் சிறப்புற நடத்திக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி இனிது நிறைவேற அனைவரும் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

* *

பொன்மலை திராவிட வாலிபர் கழகச் சொத்து

★

பொன்மலை திராவிட வாலிபர் கழகத்தின் A & B பார்ட்டியாரின் மானேஜிங் கமிட்டியார் மேற்பார்வையிலிருந்துவந்த பொன்மலை திராவிட வாலிபர் கழகத்தின் சொத்துக்களை மேற்படி A & B பார்ட்டியார்களுக்குள்ளாகவே ஏலம் விடப்பட்டு பாகப் பிரிவினை செய்து கொள்வதென்று 5—12—56 அன்று நடைபெற்ற மேற்படி A & B பார்ட்டியார் சேர்ந்த கூட்டுக் கூட்டத்தில் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, வருகிற 6—1—57 ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணியளவில் முறையே A & B பார்ட்டியாரைச் சேர்ந்த இருவழக்கறிஞர்கள் முன்னிலையில் மேற்படி கழகத் தோட்டத்தில் ஏலமும பாகப் பிரிவினையும் நடைபெறும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

(ஒ-ம்) ஏ. ராமலிங்கம், தலைவர் (ஒ-ம்) ஜி. பராங்குசம், தலைவர்
,, டி. ராமசாமி, செயலாளர் ,, ஏ. கோவிந்தசாமி, செயலாளர்
திராவிட வாலிபர் கழகம் A பார்ட்டி — திராவிட வாலிபர் கழகம் B பார்ட்டி

பொன்மலை 31—12—56

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

2—1—57 புதன் மாலை 6–30 மணிக்கு
திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்
டணால் கே. ஏ. தங்கவேலு & குழுவினர் அளிக்கும்

'பம்பாய் மெயில்' தமிழ் நாடகம்

தனிப்பகுதி: ரூ. 3, 2, 1, அணா 8. திறந்தவெளி இலவசம்

சென்னை கவர்னர் உயர்திரு ஏ ஜே ஜான் அவர்கள் பாராட்டிய உஷா வீணை வாத்தியம், சர்க்கஸ், நந்திரக்காட்சி ஒவியக்கலை பம்பாய் நடனம், பொம்மலாட்டம், ராட்டினம் மயில் தஞ்சாவூர் குதிரைகள் நாட்டியம், மறுபிறவி மகாத்மா காந்தி தேகப் பயிற்சி, சைக்கிள் விளையாட்டு மற்றும பல.

பொருட்காட்சி காலை 10 மணி முதல் இரவு 9 மணிவரை

பிரவேசக் கட்டணம் 0—5—0 — எம். எஸ். மோகன், காண்டிராக்டர்

எவ்வித நிலைமையையும் சமாளிக்க உணவுத் தானியங்கள் இறக்குமதி?

அடுத்த அறுவடைக்குப் பின்னர்தான் விலைவாசிகள் சீர்பெறுமாம்

புதுடில்லி, டிச. 31—

உணவுத் தானியங்களின் விலை குறைய ஆரம்பித்த போதிலும், அடுத்த அறுவடைக்குப் பிறகுதான் விலைவாசிகள் சீர்பெறக் கூடுமெனக் கருதப்படுகிறதாகத் தெரிகிறது.

இதற்கிடையில், எவ்வித நிலைமையையும் சமாளிப்பதற்கு, ஆரம்பத்தில் எதிர்பார்த்ததைவிட அதிக அளவில் உணவுத் தானியங்களை இந்தியப் பேரரசு இறக்குமதி செய்யுமென்று தெரியவருகிறது.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி 35 இலட்சம் டன் கோதுமையும், 2 இலட்சம் டன் அரிசியும் மூன்றாண்டுகளில் இறக்குமதியாகக் கூடுமாம்! நான்கு அல்லது ஐந்து கப்பல்களில் ஏற்கனவே கோதுமை வந்திருக்கிறதாகவும் செய்தி ஒன்று கூறுகிறது.

ஐந்தாண்டுகளில் 20 இலட்சம் டன் பர்மா அரிசியும் இறக்குமதியாகக் கூடுமென்றும், ஏற்கனவே இதில் 3 இலட்சம் டன் அரிசி வந்துவிட்டதாகவும், அடுத்த ஆண்டில் 5 இலட்சம் டன் அரிசி இறக்குமதியாகும் என்றும் தெரிகிறது.

இறக்குமதிகளைத் துரிதப்படுத்த அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த சில கப்பல்கள் உபயோகப்படுத்தப்படக் கூடுமாம்!

கடைநிலை ஊழியர்........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

எனவே, தங்களை கடைநிலை ஊழியர்கள் என்று அழைக்கக்கூடாது என்றும், முதல் நிலை ஊழியர்கள் என்றே அழைக்கவேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனராம்.

என்றாலும், சர்க்கார் தங்களை இனி கடைநிலை ஊழியர்கள் என்பதற்கு மாறாக, பொதுப்பணியாளர்கள் என்றோ, நான்காம் நிலை ஊழியர்கள் என்றோ அழைத்தாலும போதும் என்று கூறியிருக்கின்றனர்.

இந்த ஊழியர் மாநாட்டில் பேசிய மந்திரி சுப்பிரமணியம் இந்தக் கோரிக்கையை சுலபத்தில் நிறைவேற்றிவிடலாம் என்றும், ஆனால் பெயர் மாற்றப்படுவதினால் மட்டும் அவர்கள் வாழ்க்கைத்தரம் நிலை எப்படி மாறிவிடப்போகிறது என்று தெரியவில்லை என்றும் கூறினாராம்!

400 விதைப் பண்ணை

இரண்டாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் சுமார் 400 விதைப் பண்ணைகள் மாநிலமெங்கும் அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்றும், தென்னார்க்காடு மாவட்டத்தில் 60 பண்ணைகள் அமையும் என்றும் விவசாய இலாகா அதிகாரி ஆர். எம். சுந்தரம் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியனாகும்.